SYDNEY WEST
Area Health Service

Produced by Sydney West Area Health Service,
Multicultural Health Network & NSW Multicultural
Health Communication Service.

**DOH5300 NSW Health Care Interpreter Service – Tamil**

# நியூ சௌவுத் வேல்ஸ் சுகாதாரக் கவனிப்பு உரைபெயர்ப்பாளர் சேவை

## ஒரு உரைபெயர்ப்பாளர் எப்படி எனக்கு உதவி செய்ய முடியும்?

உரைபெயர்ப்பாளர் நி தெ வே (NSW) பொதுச் சுகாதாரச் செயல் முறையில் நோயாளிகள், சுகாதார உத்தியோகஸ்தவர்களுடன் உரையாட உதவி செய்வார்கள் – இது ஒரு வைத்தியசாலையில், சமூக சுகாதார மையத்தில், அல்லது ஆரம்ப குழந்தைப்பருவ மையத்தில் நடைபெறலாம். உரைபெயரப்பாளர் ஒரு நோயாளியின் வீட்டிற்குச் சென்று வீட்டுத் தரிசிப்புச் செய்யும் ஒரு சமூகத் தாதிக்கோ அல்லது சமூகத் தொழிலாளிக்கோ உரைபெயர்க்க முடியும். இது ஒரு இலவசமான சேவை.

## ஏன் ஒரு உத்தியோகபூர்வமான உரைபெயர்பாளரை உபயோகிப்பது அவசியம்?

ஏனென்றால் அவர்கள் பொருத்தமாகத் தகுதியடைந்தவர்கள், அத்துடன் உங்களது மொழியையும் ஆங்கிலத்தையும் சரளமாகப் பேசக் கூடியவர்கள். அவர்கள் மருத்துவத்துறைக்குரிய சொற்களைப் புரிந்து கொள்ளும் வகையில் பிரத்தியேகமாகப் பயிற்றப் பட்டவர்கள் அத்துடன் அவர்கள் நி தெ வே பொது சுகாதாரச் செயல்முறை எப்படி இயங்குகிறது என்பதையும் அறிவர்.

## இந்தச் சேவை நம்பகமானதா?

ஆம். உரைபெயர்ப்பாளர்கள் மற்றய சுகாதார உத்தியோகஸ்தர்களைப் போல் கடுமையான விதிகளுக்கு கட்டுப்பட்டவர்கள் அத்தோடு அவர்கள் உங்களது சுகயீனம் அல்லது பிரச்சினைகளை வேறு எவருடனும் கலந்துரையாடக் கூடாது.

## வேலைநேரம் அல்லாத நேரங்களில் இந்தச் சேவை கிடைக்குமா?

ஆம், பெரும்பாலான சமயங்களில் கிடைக்கும் முக்கியமாக அவசரகால வேளைகளில். சுகாதாரக் கவனிப்பு உரைபெயர்ப்பாளர் சேவை ஒரு 24 மணித்தியால சேவையை வழங்குகிறது.

## சந்திப்பு வேளையைச் சரியாக அனுசரிப்பது ஏன் முக்கியம்?

உரைபெயர்ப்பாளர்கள் சந்திப்புவேளைகள் மூலம் முன்கூட்டியே பதிவு செய்யப்படுகிறார்கள். சுகாதாரச் செயல்முறையில் உரைபெயர்ப்பாளர்களின் தேவை உயர்வாக இருப்பதால் உங்களது சந்திப்பு வேளையின் போது நீங்கள் நேரத்திற்கு சமூகமளிப்பது முக்கியம்.

## நான் ஒரு சுகாதார கவனிப்பு உரைபெயர்ப்பாளரை தொலைபேசியின் மூலம் உபயோகிக்கலாமா?

தொலைபேசியின் மூலம் வேலை நேரங்களில் சுகாதார கவனிப்பு உரைபெயர்ப்போளர்கள் கிடைக்கப் பெறுவார்கள். அவர்கள் கிடைக்காவிடில் மொழிபெயர்ப்பு மற்றும் உரைபெயர்த்துரைக்கும் சேவை (டிஸ்) ஐ 131450 இல் அழைக்கவும். டிஸ் உங்களை எந்நேரமும் பகல் அல்லது இரவில் உங்கள் மொழி பேசும் ஒரு உரைபெயர்பாளருடன் இணைக்கும்.

Produced by Sydney West Area Health Service,
Multicultural Health Network & NSW Multicultural
Health Communication Service.



**நான் எப்படி ஒரு உரைபெயர்ப்பாளரை முன்கூட்டியே பதிவு செய்ய முடியும்?**
உங்களுக்கு சேவையளிக்கும் சேவையின் அலுவலர் ஒருவரை உரைபெயரப்பாளரை ஒழுங்கு செய்யுமாறு கேட்கலாம் அல்லது நீங்களே ஒரு அழைப்பை மேற்கொள்ளலாம். ஒரு சுகாதார கவனிப்பு உரைபெயர்ப்பாளர் சேவையை தொடர்பு கொள்ள அழையுங்கள்:

**மத்திய மற்றும் தென் கிழக்கு சிட்னி**
(02) 9515 3222 வேலை நேரமற்ற வேளைகள் (02) 9515 9500

**சிட்னி வடக்கு**
(02) 9926 7560 வேலை நேரமற்ற வேளைகள் (02) 9926 6500

**தென் மேற்கு சிட்னி**
(02) 9828 6088 வேலை நேரமற்ற வேளைகள் (02) 9616 8111

**சிட்னி மேற்கு மற்றும் வென்ட்வேத்**
(02) 9840 3456 வேலை நேரமற்ற வேளைகள் (02) 9840 3456

**கன்டர் (Hunter)**
(02) 4924 6285 வேலை நேரமற்ற வேளைகள் (02) 4921 3000

**நி தெ வே இன் எல்லா கிராமப்புறங்கள் கிரேட்டர் முறே மற்றும் தெற்குப் பகுதிகள் தவிர**
**(All country areas of NSW except Greater Murray and Southern)**
1800 674 994 வேலை நேரமற்ற வேளைகள் 1800 674 994

**இலவரா (Illawarra)**
(02) 4274 4211 வேலை நேரமற்ற வேளைகள் (02) 4274 4211

**கிரேட்டர் முறே மற்றும் தெற்குப் பகுதிகள்**
**(Greater Murray and southern)**
1800 247 272 வேலை நேரமற்ற வேளைகள் 1800 247 272

தொலைபேசி எண்கள் பிரசித்த போது சரியாக இருந்தது ஆனால் தொடர்ந்து சரிபார்க்கப்பட மாட்டாது. நீங்கள் தொலைபேசிப் புத்தகத்தில் எண்களைச் சரி பார்க்க வேண்டும்.